## கேள்வி:

# "அப்போஸ்தல முன்மாதிரி எப்பொழுது கட்டுப்படுத்துகின்றது?"

## பதில்:

*தெய்வீக முன்மாதிரி என்ற விஷயத்தைப் பொறுத்த மட்டில், "அப்போஸ்தல முன்மாதிரி எப்பொழுது கட்டுப் படுத்துகின்றது?" என்ற கேள்வி அடிக்கடி எழும்புகிறது. நமது கர்த்தரின் அப்போஸ்தலர்களால் எது கட்ட அல்லது கட்டவிழ்க்கப்படுகிறதோ, அது நியாயத்தீர்ப்பு நாள் வரை யிலும் கட்ட அல்லது கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்பதில் வேத வசனங்கள் தெளிவாய் இருக்கின்றன (மத். 16:19; 18:18). ஆலயத்தில் (அப். 2:46), ஒரு பள்ளியில் (அப். 19:9), வீடுகளில் (அப். 5:42) மற்றும் ஆற்றோரத்தில் (அப். 16:13) உபதேசிக்கும் முன்மாதிரிகளை அப்போஸ்தலர்கள் வைத்துச் சென்றுள்ளதை ஒருவர் உற்று நோக்கும் போது, "எந்த முன்மாதிரி கட்டுப் படுத்துகின்றது?" என்று அவர் கேட்கத் தேவையில்லை. நாம் இவ்விடங்கள் எல்லாவற்றிலும் உபதேசம் செய்யலாம்.*

*தேவன் தமது சித்தத்தை அறியும்படி நாம் கற்க வேண்டும் என்று விரும்புகிறார் (1 தீமோ. 4:13; எபே. 5:17). சில விஷயங் களில் எது சரியானதென்று நமக்குள்ளேயே நாம் தீர்மானிக்க வேண்டியுள்ளது (லூக். 12:57). எப்படியிருப்பினும், தெய்வீகக் கொள்கை ஒன்று உள்ளடங்கியுள்ளபோது மட்டுமே அப்போஸ்தல முன்மாதிரி கட்டுப்படுத்தும்.*

*கொள்கை என்பது சட்டம் அல்லது செயல்பாடுகளின் வரைமுறையாக உள்ளது. வேதவசனங்கள், "மூல உபதேசங் கள்" (எபி. 5:12; 6:1ஐக் காண்க) பற்றிப் பேசுகிறது. நாம் சில "பிரமாணத்தின்"படி அல்லது "தரத்தின்"படி (கலா. 6:16; பிலி. 3:16) நடக்கக் கட்டளை பெற்றுள்ளோம்.*

*அப். 2:38, 41, 42ல் முதல் கொள்கைகள் மற்றும் முழுமை யான கொள்கைகள்பற்றி நாம் படிக்கின்றோம். வேறுவார்த்தை களில் சொல்வதானால், கிறிஸ்துவுக்குள் வருதல் மற்றும்*

கிறிஸ்துவுக்குள் தொடர்ந்து இருத்தல் பற்றிய கொள்கைகள் இங்குள்ளன. தேவனுடைய வசனத்தில் இதற்கு மாற்று வழி எதுவும் இல்லை. எனவே இந்த முன்மாதிரி கட்டுப்படுத்து கின்றது.

அப். 2:44ல், நாம், ஆதி சபையில் சமூகத்தின் செல்வங்கள் பகிர்ந்து கொள்ளப்படுதல் பற்றிப் படிக்கின்றோம். இது ஒரு கட்டுப்படுத்தும் உதாரணமா? இல்லை, ஏனெனில் அப். 5:4ல் ஒருவர் தம்முடைய பொருட்கள் அனைத்தையும் ஒப்புக் கொடுப்பதென்பது அவருடைய சுயவிருப்பத் தேர்வாயிருப்ப தைக் குறிப்பிடுகின்றது.

அப். 6ல், சபையின் பந்தி விசாரணைக்கென்று நபர்களைத் தேர்ந்துகொள்ளும் நிகழ்ச்சியில், அப்போஸ்தலர்கள் அந்நபர்களின் பெயர்களை முன்மொழியவில்லை. சபைதான் அந்நபர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது அப்போஸ்தல முன்மாதிரியாய் உள்ளது (அப். 6:3). பிராந்திய சபையைப் பொறுத்தமட்டில், சுய ஆளுகை அமைப்பைத் தவிர வேறு எந்த முன்மாதிரியும் புதிய ஏற்பாடு முழுவதிலும் நாம் காணுவதில்லையாதலால், இந்த அப்போஸ்தல முன்மாதிரி கட்டுப்படுத்துவதாய் உள்ளது. வேதவசனங்களில் இதற்கு மாற்று எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

அப். 8:9-24ல், தேவனுடைய பிள்ளையாயிருந்தும், தவறிழைக்கும் ஒருவர் தேவனுடைய இரக்கத்திற்குத் திரும்புவதற்கான விதிபற்றி நாம் படிக்கின்றோம். மனந்திரும்பி ஜெபித்தல் என்பதற்கப்பால் வேறு ஏதேனும் நாம் படிக்கக் கூடுமென்றால், அப். 8ல் காணப்படும் முன்மாதிரி கட்டுப் படுத்தும் என்று நாம் கூற இயலாது. ஆனாலும், வேதவசனங் களில் இதைத் தவிர வேறு வழியொன்றும் எங்கும் தரப்பட வில்லை.

அப். 11:22ல் ஒரு சபையானது இன்னொரு சபைக்கு சுவிசேஷ ஊழியரை அனுப்பி ஒத்துழைக்கலாம் என்பதைக் காண்கின்றோம். இக்கொள்கையானது தவறாகப் பயன் படுத்தப்படக் கூடும். இதைப் பெற்றுக் கொள்ளும் சபை யானது மற்ற சபைகளைச் சார்ந்திருப்பதின் மூலம் பலவீனப் படக் கூடும் என்று ஒருவர் கூறலாம். இன்னொருவர், இவ்வாறு அனுப்பும் சபை மிக முக்கியமான சபையாக ஆவதற்கு முயற்சி செய்வதாய்க் கூறலாம். மனிதர்கள் என்ன சொல்லக்கூடும் என்பது ஒரு பொருட்டல்ல, ஒரு சபையானது இன்னொரு

*சபையின் ஊழியத்தில் உதவி செய்யலாம் என்பது அப்போஸ்தல முன்மாதிரியினால் சரி என்னப்படுகிறது. இருப்பினும், இந்த முன்மாதிரி கட்டுப்படுத்துகிறது என்று ஒருவர் முடிவெடுக்கலாமா? வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பிராந்திய சபைகள் பக்தி விருத்தியடைய இது ஒன்றுதான் வழியா? நிச்சயமாக இல்லை. எபேசியர் 4:16, "... சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்தி விருத்தி உண்டாக்குகிறதற் கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது'' என்று கூறுகிறது. இருப்பினும், இந்த முன்மாதிரி புதிய ஏற்பாட்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வழியாய் இருக்கிறது.*

*அப். 11ல் வேறொரு முன்மாதிரியும் தரப்பட்டுள்ளது. இதில் சகோதரர்களின் குழுவொன்று இன்னொரு சபை அல்லது சபைகளுக்கு நிதி உதவி அனுப்பியது. பின்வரும் நான்கு காரணங்களின் அடிப்படையில் இவை செய்யப் பட்டிருக்கலாம் என்று ஒருவர் வாதிடக்கூடும்: (1) அவசர நேரத்தில் மட்டும், (2) சகோதர சகோதரிகளுக்கு மட்டுமே இவ்வுதவி செய்யப்படலாம், (3) குறிப்பிட்ட வரையறை அல்லது சபையின் எல்லைகளுக்குப் புறம்பே இவ்வுதவியில் எதுவும் பயன்படுத்தலாகாது, மற்றும் (4) இது சகோதரர்களின் கைகளில் கொடுத்து அனுப்பப்பட வேண்டும். இவ்விதமான காரணங்கள் இவ்விஷயத்திற்கு அதிக அழுத்தம் தருகின்றன. ஒரு சபை இன்னொரு சபைக்குப் பணம் அனுப்புகையில் அது சபையின் தன்னாட்சி அமைப்பை அழிக்கும் என்ற வாத மானது, அந்தியோகியா சபை தனது தன்னாட்சி அமைப்பை இழந்து விட்டதென்ற வாதம் செய்யும்படி வைக்கிறது. உதவி செய்தல் தவறு என்று கூறினால், யூதேயாவிலுள்ள மூப்பர்கள் தவறு செய்தனர் என்று கூறுவதற்கொப்பாகும். தங்களது சொந்தப் பொருட்கள் மூலம் நிறைவு செய்யவியலாத திட்டத்திற்கு அவர்கள் உதவியேற்றனர். அகராதியில் உதவுபவர் என்ற வார்த்தைக்கு, "மற்றொரு நபருடைய அல்லது இடத்தின் வளர்ச்சிக்கென்று பொறுப்பேற்றுள்ளதாகத் தன்னை ஒப்புக் கொடுத்து எண்ணுபவர்'' என்ற பொருள் காணப்படுகிறது.*

*அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் காண்கையில், 13*

*மற்றும் 14ம் அதிகாரங்களில் சபையானது ஊழியர்களை அனுப்பியதையும், சபையானது அவர்களின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதையும் காண்கின்றோம். ஊழிய சமுதாயம் என்ற முன்மாதிரி தரப்படவில்லையாதலால், சபையே தேவனுடைய ஊழிய சமுதாயமாயுள்ளது என்ற அப்போஸ்தல முன்மாதிரி கட்டுப்படுத்துவதாய் இருக்கின்றது. அப். 14:23ல், ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருப்பதைக் காண்கின்றோம். வேறு எவ்வித முன்மாதிரியும் வேதவசனங்களில் காணப்படாததால், இந்த முன்மாதிரி கட்டுப்படுத்துகிறதென்று எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.*

*அப். 18:3ல், பவுல் கூடாரத் தொழில் செய்து தனக்குத் துணை வருவாய் ஈட்டிக் கொண்டார் என்று அறிகின்றோம். இது ஒரு கட்டுப்படுத்தும் முன்மாதிரியா? ஒருவர் ஒரு தச்சுத் தொழிலாளியாக இருக்க முடியுமா? ஊழியர் ஒருவர் சபையின்மூலம் மட்டும் முழு உதவி பெறக்கூடுமா? நிச்சயமாகவே, இவ்விஷயத்தில் சுவிசேஷ ஊழியர்கள் தங்கள் சுயவிருப்பத் தேர்வைச் செய்யலாம் என்று வேதவசனங்கள் தெளிவாய்க் கூறுகின்றன (1 கொரி. 9:11-14; 2 கொரி 11:8). கூடாரத் தொழில் செய்தல் என்ற அப்போஸ்தல முன்மாதிரி கட்டுப்படுத்துவதல்ல.*

*அப். 20:7-9ல், கர்த்தருடைய நாளில், அப்பம் பிடுவதற்கு, மூன்றாம் தளத்தில், இரவு நேரத்தில் கூடி வந்ததைப் படிக்கின்றோம். என்றால், இது கர்த்தருடைய நாளில் இராத்திரி வேளையில், மூன்றாம் தளத்தில்தான் கூட வேண்டும் என்ற கொள்கையைக் கூறுகின்றதா? மற்ற வேதவசனங்கள் (எபி. 10:25; வெளி. 1:10) வாரத்தின் நாள்தான் முக்கியம் என்று உணர்த்துகின்றன.*

*நாம் தற்செயலானவைகளையும், தெய்வீகக் கொள்கைகளையும் வேறுபடுத்தக் கற்றுக்கொள்ளும்படியாகவே தேவன் விரும்புகின்றார்.*